**Date** : 13.11.2025

**SC.No.** : 288/2023

**PW** : 1

**Name** : **ஜெகதீஸ்வரன் த.பெ.அய்யாவு**

**(1வது எதிரி சிறையில் உள்ளார். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி தரப்பில் குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிப்பட்டது)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரணை செய்தார் என்றால் காவல்நிலையத்தில் வைத்து சுமார் 12.00 மணியளவில் விசாரித்தார். இந்த வழக்கு சம்மந்தமாக யார் புகார் மனு கொடுத்தது என்றால் சார்பு ஆய்வாளர் கொடுத்தார். யாரிடம் புகார் மனு கொடுத்தார் என்றால் ஆய்வாளரிடம் கொடுத்தார். புகார் கொடுக்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை சுமார் 8.30 மணியிருக்கும். அது எழுத்துபூர்வமான புகார் மனு என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்களான வாள் மற்றும் கார் சம்பவயிடத்திலேயே கைப்பற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் அத்தாட்சி தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது. அந்த அத்தாட்சியில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. கைப்பற்றப்பட்ட கார் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. எந்த திசையிலிருந்து எந்த திசையில் கார் வந்தது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. நாங்கள் எந்த திசையில் நின்று கொண்டிருந்தோம் என்றால் சாமியார்பட்டியில் ரோட்டு விலக்கின் மேற்குபக்கம் நின்றுகொண்டிருந்தோம். ஆய்வாளர் விசாரணையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கார் வந்த விபரத்தை கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 6.30

மணியிருக்கும். காலை 6.30 மணியிலிருந்து அங்கு தான் இருந்தோம் என்றால் சரிதான்.

3. வாகனசோதனையின்போது வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டதா என்றால் வழக்கு பதிவு செய்யப்படவில்லை, ஒவ்வொரு ஆளாக சோதித்தோம். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் காரை நாங்கள் சோதனை செய்தபோது வேறு தனிநபர்கள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்தோமா என்றால் கைது செய்தோம். அப்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை சுமார் 7.00 மணியிருக்கும். காரை யார் காவல்நிலையத்திற்கு ஓட்டிவந்தது என்றால் சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் ஓட்டிவந்தார். எதிரிகளை அதே காரில் அழைத்து வந்தோமா என்றால் ஆமாம்.

4. சம்பவயிடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். காலை 7.30 மணிக்கு காவல்நிலையம் வந்துவிட்டோம் என்றால் சரிதான். போலிசார் பார்ட்டி யாருக்கும் காயமில்லை என்றால் இல்லை. 1வது எதிரி காரின் முன்பகுதியில் உட்கார்ந்திருந்தார். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையின் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது ஆய்வாளர் இருந்தாரா என்றால் இருந்தார். ரோந்து பணி செய்தோமா அல்லது வாகன தணிக்கை செய்தோமா என்றால் ரோந்து பணியாக தான் சென்றோம் வாகன தணிக்கைக்கு செல்லவில்லை. எதிரிகள் வந்த காரை யார் மறித்தார்கள் என்றால் சார்பு ஆய்வாளரும் நாங்களும் மறித்தோம். குறிப்பாக யார் காரை மறித்தார் என்றால் சார்பு ஆய்வாளர் தான் மறித்தார்.

5. சொன்ன நாள், தேதியில், நேரத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் காரில் வரவில்லை என்றும் 1வது எதிரி காரைவிட்டு இறங்கி சார்பு ஆய்வாளரை வாளால் வெட்ட முயற்சிக்கவில்லை என்றும் 1வது எதிரி 2வது எதிரியிடம் காரை ஏற்றி சார்பு ஆய்வாளரை கொல்லும்படி சொன்னதாகவும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன

விதத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நாளில், நேரத்தில் ரோந்து பணி மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

6. புகார் கொடுத்தது சார்பு ஆய்வாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயர் காவல் அதிகாரிகளின் நிர்பந்தத்தின் பேரில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் கைது செய்யவுமில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் காரில் வரவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் அந்த காருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.13 13:43:25 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**